1975 நவம்பர் 11]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த கண்காட்சி ஆண்டுதோறும் நடைபெறுவது இன்ஷூரன்ஸ் செய்வது அந்த அந்த பிரைமரி சொஸைடிகளைப் பொறுத்தது.

Distribution of essential commodities

* 293 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether there is any proposal to open model shops in the State to distribute essential commodities at competitive prices; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கோவை மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

* 294 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975–76 நிதி ஆண்டில் வறட்சிப் பணிகளுக்கான துயர் துடைப்பு பணிக்காக கோவை மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வறட்சி நிவாரணப் பணிகளுக்காக கோவை மாவட்டத்திற்கு 1975–76 ஆம் நிதி ஆண்டில், ரூ. 165.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, ஒதுக்கப்பட்ட பணம் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக கொடங்கப்பட்ட வேலைகள் முடிவு பெறாமல் இருந்து கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வறட்சியெல்லாம் இப்போது முடிந்துவிட்டது.